

சென்னை, அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் நேற்று (26.4.2025) நடைபெற்ற “நான் முதல்வன் திட்டம்” மற்றும் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குடிமைப் பணி தேர்வில் தேர்ச்சி பெற்ற வெற்றியாளர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியின் கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறை தலைவர் விக்ரம் கபூர், மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் போட்டி தேர்வு சிறப்பு திட்ட இயக்குநர் சி.சுதாகரன், IRPS ஆகியோர் உடனிருந்தனர்.



முரசொலி செல்வம் சிலை திறப்பு! முதல்வராக மட்டுமல்ல;

# குடும்பத் தலைவர் என்பதை உணர்த்திய விழா!

## பழம்பெரும் திரைப்பட இயக்குநர் வி.செ.குகநாதன் பாராட்டு!

“முரசொலி” செல்வம் அவர்களின் சிலையைத் திறந்து, அவரது கட்டுரைகளின் தொகுப்பை வெளியிட்ட மனநிறைவான நிகழ்ச்சியைக் கண்டேன்.

**நேர்மை என்பது அச்சமின்மையின் உச்ச கட்ட வடிவமாகும்! அறிவுத் திறன் என்பது மனிதனின் உண்மையான அடையாளமாகும்! விடாமுயற்சி என்பது உயர்ந்த பண்பாகும். நட்பைப் பேணுதல், எல்லையற்ற பொறுமை, எழுத்தில் வலிமை, வாழ்வில் எளிமை... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்... செல்வம் அவர்களைப் பற்றி எழுதுவதென்றால்!**

படிக்கின்ற காலத்திலிருந்தே அவரை நான் அறிவேன். பல பேருக்கு அவர் ஏணியாக இருந்தார். இன்று அந்தச் சிறிய விழாவில் எத்தனை பெரிய மனிதர்கள்!

**சகோதரர் ஸ்டாலின் அவர்கள், யாரையும் தவறவிட்டு விடக்கூடாது என்பதற்காக, செல்வத்தின் குழந்தைகளை அழைத்து படத்தின் முன்னால்**



**நிற்க வைத்தது. பேசும்போது கலங்கிய கண்கள், அமிர்தம் அவர்களை அழைத்து அங்கே நிற்க வைத்தது, அவரை அங்கே முதல்வராகப் பார்க்க முடியவில்லை. குடும்பத் தலைவனாக, செல்வியின் சகோதரனாகவே பார்க்க முடிந்தது.**

**நல்ல குடும்பம், நல்ல வாரிசுகள், நன்றியுள்ள நண்பர்கள்... ஒரு மனிதனுக்கு அவசியம் என்பதனை உணர வைத்தது இந்த சின்ன விழா.**



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

டெல்டா மாவட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஆறுகள் – நீர்வழிகள் தூர் வாரப்படும்!

# பாசனத்திற்காக ஜூன் 12 அன்று மேட்டூர் அணை திறக்கப்படும்!

## சட்டப்பேரவையில் – கவன ஈர்ப்புக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!

சென்னை, ஏப்.27-

பாசனத்துக்காக ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்று சட்டப்பேரவையில்சிறப்புகவனஈர்ப்பில் நீர்வளத்துறைஅமைச்சர்துரைமுருகன் அவர்கள் விளக்கம் அளித்து பேசினார்.

**சட்டப்பேரவையில் உறுப்பினர் இரா. காமராஜ்,**

“டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர் வாரும் திட்டத்தின் மூலம், ஆறுகள் தூர் வாருதல் மற்றும் நீர்வழிகள் சரிபார்த்தல் போன்ற பணிகளை ஒவ்வோர் ஆண்டும் செய்து வருகிறோம். மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பாகவே பணிகளை முடித்துத் தர வேண்டும்” என்று கவன ஈர்ப்பில் கோரிக்கை விடுத்து பேசினார். இதற்கு பதிலளித்து **நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-**

உறுப்பினர் தஞ்சாவூரில் பேசுவதைப் போன்று பேசியிருக்கிறார். அது முறைதான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், கடந்த ஆண்டு மழை பெய்தபோது, நீர்பிடிப்பு பகுதிகளெல்லாம், ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் வெள்ள நீர் சென்றதால், மண்திட்டுக்கள் ஏற்பட்டுள்ளது. இந்த மண் திட்டுக்களை அகற்றி, தண்ணீர் தங்கு தடையின்றி செல்வதற்கு வழி செய்யும்பொருட்டு, திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் 5,021.74 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாசன அமைப்பு ஆதாரங்களை மேற்கொள்ள முன்னுரிமை அடிப்படையில் தூர்வார முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு சிறப்புத் தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 882 பணிகளாகப் பிரிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இப்பணிகளைத் திறம்பட செய்து முடிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்பணிகள் அனைத்தும் மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும். இந்த ஆண்டு ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் இன்னொன்றை சொன்னார். கடந்த 4 ஆண்டுகளில் எத்தனை தூர்வாரும் பணிகளில் நாங்கள் ஈடுபட்



டோம் என்பது குறித்த ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். தூர்வாரும் பணிகளே ஒரு காலத்தில் கிடையாது.

நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது முதலமைச்சர் அவர்கள்தான் தூர்வாரும் பணிகளை கொண்டுவந்தார். அப்போது எல்லோரும் பாராட்டினார்கள். அதனால், 2021-2022ல் 63 கோடி ரூபாய், 2022-2023ல் 78 கோடி ரூபாய், 2023-2024ல் 80 கோடி ரூபாய், 2024-25ல் 95 கோடி ரூபாய் என நிதியொதுக்கப்பட்டு ஆண்டுதோறும் அணையின் பாசனத்திற்கு திறந்து விடுவதற்காக எல்லா கால்வாய்களும் தூர்வாரப்படுகின்றன. அதன் விளைவாக, நான்கு ஆண்டுகளாக அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கடைமடை வரை சென்றிருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மேட்டூர் அணை திறக்கப்பட்ட விவரத்தை சொல்கிறேன். 2021-ம் ஆண்டில் ஜூன் 12-ஆம் தேதி, 2022-ஆம் ஆண்டில் தண்ணீர் இல்லாத காரணத்தால் முன்கூட்டியே மே மாதமே திறந்து விட்டோம். 2023-ஆம் ஆண்டில் ஜூன் 12-ஆம் தேதி, 2024-ஆம் ஆண்டில் பருவ மழை காரணமாக 28-ஆம் தேதி அதை திறந்திருக்கிறோம்.

இன்னொன்றை நண்பர் சொன்னார், இந்த குடிமராமத்து இல்லையென்று சொன்னீர்கள். அது குடிமராமத்து உங்களுக்குத் தெரியும். RRR Work என்று ஒன்று கொண்டுவந்திருக்கிறோம். அந்த RRR-னுடைய Work என்னவென்றால், இந்த தூர்வாரும் பணிதான். தற்போது செய்திருக்கும் பணிகள் தான். இந்தத் திட்டத்தின்மூலம் அதில் விவசாயிகளும் பங்கு கொண்டிருக்கிறார்கள். சர்க்காரும் பங்கு கொண்டிருக்கிறது. இரண்டாவது, இலவசமாக மண் எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று விவசாயிகளிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் மூலமாகவும் தூர்வாரிக்கொண்டுபோயிருக்கிறார்கள். RRR Workயிலும் செய்கிறோம். தமிழ்நாடு அரசு நிதியுதவியும் செய்கிறோம். விவசாயிகளையும் கலந்து கொள்ளச் செய்கிறோம். ஆகமொத்தம், கூட்டிப்பார்த்தால் அதுதான் மராமத்து வேலை.

விவசாயத்தைக் குறித்து, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமைகளை அவர் சொன்னார். Shutterகளுக்கெல்லாம் பணம் ஒதுக்கவில்லை என்றார். என்னுடைய மானியக் கோரிக்கையில் மறுபடியும் எடுத்துப் பார்த்தால் இந்த ஆண்டு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று தெரியும். அவர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். இப்பிரச்சினை வெகுநாட்களாக இருக்கிறது. நாங்கள் இப்போதுதான் ஆட்சிக்கு வந்தோம். நான்கு வருடங்களுக்கு முன்னால்தான் வந்தோம். அது எல்லா இடங்களிலும் வெகுநாட்களாக பழுதடைந்துள்ளது.

இரண்டாவது, shutterகளை மாற்றி விட்டு வந்தால், அடுத்து, அதை திருடர்கள் திருடிச் சென்றுவிடுகிறார்கள். ஏரிக்கரைகள், நீர்நிலைகள், மதகுகள் போன்ற இடங்களில் பொருத்தப்படுவதைத் திருடிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அதைக்கொண்டுபோய் விற்றால் காசு வருகிறது. எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். அதையும் கழட்ட முடியாதபடி செய்வதற்கும் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, அவர் சொன்னது போன்று, அவர் சொன்ன இடங்களெல்லாம் நான் குறித்து வைத்திருக்கிறேன். ஏனென்றால், விவசாயத்தின் நலனுக்காக தெரிவித்திருக்கிறீர்கள். ஆகையால், நிதிநிலைமைக்கேற்ப அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உறுதிபட தெரிவித்தார்.

வாடிகனில்

# போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கு!

வாடிகன், ஏப். 27–

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் இறுதிச் சடங்கு வாடிகனில் நடைபெற்றது.

மறைந்த போப் பிரான்சிஸ் உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. இனிகோ இருதயராஜ் ஆகியோர் நேற்று முன்தினம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அமெரிக்க அதிபர் டிரம்ப், அர்ஜென்டினா அதிபர் ஜேவியர் மிலே, உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி, பிரான்ஸ் அதிபர் மெக்ரான், இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் உள்பட உலக நாடுகளின் தலைவர்கள் மறைந்த போப் பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். நேற்று காலை 10 மணிக்கு போப் பிரான்சிஸ் உடலுக்கு செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் இறுதிச்சடங்குகள் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து புனித மேரி மேஜர் பலிசிக்கா பேராலயத்தில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின்

# வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தடுத்திடும் சட்ட முன் வடிவு!

## சட்டப் பேரவையில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிமுகம் செய்தார்!

**சென்னை, ஏப். 27 -**

**சட்டப் பேரவையில் நேற்று, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின் - வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தடுத்திடும் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்தார்.**

இச் சட்ட முன்வடிவின், “நோக்கக் காரண விளக்கவுரை”யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பணக்கடன் வழங்குபவர்கள் மற்றும் அடகுக் கடைக்காரர்களின் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தி, கடனின் மீதான கடும் வட்டியிலிருந்து மக்களைக் காப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. 1943 ஆம் பணக்கடன் வழங்குபவர்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் XXVI/1957) மற்றும் 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கந்து வட்டி விதித்தல் தடைச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/2003) ஆகியவற்றை அரசு இயற்றியுள்ளது. எனினும், சமீப காலமாக, சமூகத்தின் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினர் குறிப்பாக விவசாயிகள், மகளிர், சுய உதவிக் குழுக்கள், விவசாய கூலித்தொழிலாளர்கள்,



பணியாளர்கள், நடைபாதை வியாபாரிகள், பால் பண்ணைத் தொழிலாளர்கள், கட்டிடப் பணியாளர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோர் எண்ம முறையில் வழங்கல் தளங்கள் உள்ளடங்கலாக பணக்கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் கவர்ச்சிகரமான கடன்களுக்கு அடிக்கடி இரையாகி, தாங்க இயலாத கடன் சுமைக்கு ஆட்படுகின்றனர். மேலும், பணக்கடன் வழங்கும் நிறுவனங்கள், ஏற்கனவே நிதிச் சுமையில் இருக்கும் கடன் பெற்றவர்களிடமிருந்து கடனை வசூலிப்பதற்கு முறையற்ற வழியை நாடுகின்றனர்; அது, துயரத்தில் இருக்கும் கடன் பெற்றவர்களை சில சமயங்களில் தற்கொலை செய்துகொள்வதற்கு தூண்டுதலாய் அமைந்து, அதன் மூலம் பலரின் குடும்பங்களை அழித்து சமூக ஒழுங்கை பாதிப்படையச் செய்கிறது.

எனவே, தனிநபர் அல்லது தனிநபர்கள் குழு, சுயஉதவிக் குழுக்கள் அல்லது கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் ஆகியவற்றிற்குக் கடன் வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின், வலுக்கட்டாய வசூலிப்பு முறையால் ஏற்படும் மிகுந்த இன்னல்களிலிருந்து பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரை பாதுகாக்க ஒரு சட்ட வரையறைக்கு வகை செய்வது அவசியமென கருதப்படுகிறது. அதற்கிணங்க பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின் வலுக்கட்டாய நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு ஒரு சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

இவ்வாறு அந்த விளக்கவுரையில் கூறப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி

# போப் பிரான்சிஸ் உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அஞ்சலி!

## அமைச்சர் சா.மு.நாசர் – இனிகோ எஸ்.இருதயராஜ் எம்.எல்.ஏ. நேரில் செலுத்தினர்!

வாட்டிகன், ஏப்.27-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி போப் பிரான்சிஸ் உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அமைச்சர் சா.மு.நாசர், இனிகோ எஸ். இருதயராஜ் எம்.எல்.ஏ. ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் 266-வது தலைவராக அர்ஜெண்டினாவைச் சேர்ந்த போப் பிரான்சிஸ் கடந்த 2013-ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார். இவர் LGPTQ சமூகத்தினர் மற்றும் பாலின சமத்துவம் குறித்து தெரிவித்த முற்போக்கு கருத்துக்கள் பெரும் ஆதரவை பெற்றுத்தந்தது.

இதனிடையே உடல் நலக்குறைவால் கடந்த பிப்ரவரி 14-ல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த போப் பிரான்சிஸ் மார்ச் 23-ஆம் தேதி வாடிகன் திரும்பினார்.

இந்நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக தனது 88-வது வயதில் போப் பிரான்சிஸ் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலகம் முழுவதும் இருந்து அவருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில், பரிவோடும், ”முற்போக்குக் கொள்கைகளோடும் கத்தோலிக்கத் திருச்சபையினை வழிநடத்தி, பெரும் மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமையான திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவு குறித்து அறிந்து மிகவும் வேதனையடைந்ததாகத் தெரிவித்திருந்தார்.

அதோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மறைந்த போப் பிரான்சிஸ் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இந்நிலையில், ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்ஆவடி சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (25.04.2025) அன்னாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், இனிகோஎஸ்.இருதயராஜ் பங்கேற்று. போப் பிரான்சிஸ் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ்.இருதயராஜ் ஆகியோர் ரோம் நகர் வாடிகனில் நேற்று முன்தினம் (25.04.2025) நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று, திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.